297
1297

உ

கடவுள் துணை.

விவேக விளக்க விநோத

விடுகவிப்பொக்கிஷம்

இஃது

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

எழுதப்பெற்று

பி. நா. சி. பிரதர்ஸ்

ஏஜண்டு

[illegible]ிருஷ்ண பிள்ளை

[illegible]ால் வெளியிடப்பெற்றது

1933 [விலை அணா 4

0-,83
N33
121055

உ

கடவுள் துணை.

விவேக விளக்க விநோத

விடுகவிப்பொக்கிஷம்

9-DEC 1933

இஃது

த. குப்புசாமி நாயுடு

எழுதப்பெற்று

பி. நா. சி. பிரதர்ஸ்

ஏஜண்டு

மு. கிருஷ்ணபிள்ளை

அவர்களால் வெளியிடப்பெற்றது

ரிஜிஸ்டர் செய்தது] 1933 [விலை அணா 4

விவேகாநந்தா பிரஸ்,
தளவாய் அக்கிரஹாரம்,
மதுரை—1933.

2644
121055

உ

முருகன் துணை

விவேக விளக்க விநோத

விடுகவிப் பொக்கிஷம்

அட்டவணை.

1	தாரணியில் இந்திரன்	சர்க்கரைப் பொங்கற்பானை.
2	வீறுவெள்ளை வாரணத்தின்	மயில்விசிறி.
3	சித்தர்புகழ் ஆலவாய்	துவஸ்தம்பம். கொடிமரம்.
4	திக்குவென்ற தடாதகை	தேங்காய்.
5	வாரணியும் முகிலுமை	பனைமரம்.
6	தேவர்தொழுங் கூடல்வெள்	உழுகலப்பை.
7	வள்ளையன்னஞ் சிறியகுண்	ஆமணக்குமுத்து.
8	பொன்னூரும் வைகையன்ன	தடப்பக்கட்டை.
9	சித்திரக்காஞ் சனையாட	உரல். குந்தாணி.
10	அந்தரஞ்சேர் மலையத்து	பெண்.
11	துய்யவுக்ர பாண்டியன்	தூண்டில்.
12	நஞ்சயில் வேல்வளை	மீன்பிடிக்கும்வலை.
13	இரைகடல் நீர்சுவறவேல்	புடவை.
14	அண்டர்கோன் முடிமீதில்	விளக்கு.
15	தங்கும் பொன் மலையை	புடலங்காய்.
16	சுத்தமறைப் பொருளைமா	முறம். சுளகு.
17	தக்கபாண்டி யற்குமா	கண்ணாடி.
18	வருணன் விட்டகடலதனை	பரமசிவன்.
19	போற்றருநான்மாடக்கூ	கதவு.
20	மாணமுதல் நீத்ததெல்லாம்.	கஞ்சா.
21	சீலமுடன் கல்லானை	மதகு.
22	மாலமணர் ஏவுமதயானை	மூங்கில்.
23	மாவிருத்த குமாரபாலக	புளியம்பழம்.
24	தரைபாண்டி யற்காக	வெங்காயம்.

25	பன்னரிய பழியஞ்சு	சதுரங்கம்.
26	பாவமெனும் மாபாதகத்தை	பூட்டு
27	விஞ்சையருளினத் தீங்கு	தம்புரு.
28	இகலமணர் விடுமரவை	விபூதி. திருநீறு.
29	புத்தர் விடும் அத்திவர	கேழ்வரகு. கேப்பை.
30	சீருறுமெய்க் காட்டி	தண்ணீர்.
31	உலவாநற் கிழியொன்று	பாக்கு.
32	சிருண்ட மங்கையர்க்கு	ஏத்தம்.
33	போற்றியமாதர்க்கட்ட	அகப்பை.
34	இட்டவிடையினைச்சினை	மட்கலம்.
35	வளவனுக்கும் படைக்கும்நீர்	தாப்பாள்.
36	அருமைபெறும் ரசவாதம்	ராட்டினம்.
37	பொருமிகவிழ் சோளனை	முகட்டுப்பூச்சி.
38	தென்னவனுக் கேவுலவாக்	செப்புக்குடம்.
39	ஒருவணிகற்கம்மானாய்	அம்மி.
40	காக்கும்வர குணனுக்கு	மண்கரகம்.
41	புலமைகொளும்பாணனுக்	வாழைமரம்
42	மட்டில்லாத் திருமுகமோர்	சொக்கட்டான்
43	திட்டமுள்ள பலகையொன்	வெற்றிலை
44	விறலியைத்தன்னிறைவரு	உறிக்குடுவை
45	அடல் பன்றிக்குருளைக்கு	எச்சிற்கலை.
46	உருவளரக்குருளையை	திராசு.
47	சீருலவுங் கருங்குருவிக்	ஈ.
48	பார்த்தந்த நாரைக்குப்	மரக்கால்
49	அரவினுற் கன்னிபுரத்	சுண்ணாம்பு
50	ஒருவனவன் படைக்கெதிர்	வரகேந்திரம். திருகை.
51	ஐயமில் சங்கத்தார்க்குப்	வேப்பிலை
52	நிலைமைபெறத் தருமிக்குக்	பொன்
53	வாக்கில்வல கீரனைமுன்	உப்பு
54	முற்றவிலக் கணங்கீரற்	சுரைக்காய்
55	வாழ்வுதருஞ் சங்கத்தார்	சங்கு
56	சித்தனெனும்இடைக்காட	பேன்
57	வேலைவலை வீசியொரு	முக்காலி
58	இட்டமுடன் மாணிக்கற்கு	கிணறு

59	வெறித்தநரித்திரளைபரி	செருப்பு.
60	கோலமுறும்பரிகளைமுன்	டமரா எருது.
61	மண்சுமந்துமேனிமேல்	காற்றாடி.
62	வெத்திகூன்பாண்டியற்கு	ஈச்சம்பழம்.
63	மானும்சயிஞ் சமணரை	கலியாணப்பூசினி.
64	கடுவன்னிக் கிணறு	மேகம்.
65	திருமதுரா புரியில்வளர்	வாணர்வணக்கம்.
66	வருங்காலம் நிகழ்ந்துரைப்	விநாயகர்.
67	கூத்திதனக்கேயலைவான்	சுப்பிரமணியர்.
68	காணுதற்குக்கண்ணில்படா	காற்று.
69	ஈரிரண்டுகம்பமுண்டு	யானை.
70	கட்டியடித்தேயகற்றும்	குதிரை.
71	கொண்டையிட்டுத்தான்	மாடு.
72	கிட்டநின்றால்நெட்டிவிடும்	கழுதை.
73	குலைகுலைக்கும்அழுகலுண்	நாய்.
74	பள்ளம்வெட்டிக்குழிபறிக்கு	பன்றி.
75	பார்த்துமுகம் பல்காட்டும்	குரங்கு
76	படுக்கைக்கே அரைதேடும்	பூனை
77	நீலக்கண்ணாடிகொள்ளும்	மயில்
78	பச்சைநிறமேனியுண்டு	கிளிப்பிள்ளை
79	கருத்தகருநிறத்துடையோ	காக்கை
80	மண்மிதித்துமேற்றுளைக்கு	நண்டு
81	மரத்திலொட்டி யேவசிக்கு	தேன்கூண்டு.
82	கொத்துவழி பார்ப்பான்பசி	வாழைமரம்.
83	காதலாய்ச்சரம்தொடுக்கும்	மல்லிகைப்பூ.
84	சோலை கண்டேஉள்ளிருக்கு	கரும்பு.
85	கூட்டிலேயிருக்குமது	அம்பு.
86	பேச்சுணவு தானுமில்லை.	ரயில்வண்டி.
87	கொங்கையதிற்பால்வடியும்	கம்பம்புல்கதிர்.
88	செண்டைப்போலுச்சியிலே	மடக்கெழுத்தாணி.
89	ஒத்தைக்கொம்பேறிநிற்கு	சோளம்.
90	கட்டிகளம்போர்புரியும்	நெல்லு.
91	மஞ்சள்தனைமெய்யணியும்	எலுமிச்சம்பழம்.
92	வழுத்துகுடலுண்டுஜீவிப்	பூசனிக்காய்.

93	தலைபெருக்கும்உடல்	கோடாலி.
94	காட்டுவிற்குங்குண்டுண்டு	கொட்டப்பாக்கு
95	கண்டித்தேகுழிபுகுவான்	செக்கு.
96	காலுமிரண்டுண்டெழுந்து	பாக்குவெட்டி.
97	கட்டழகி தனக்குதடு	மண்பாண்டம்.
98	வாய்தனிலே நெருப்பெரி	திருத்தி.
99	பஞ்சுதனைத்தான்புசித்து	தலையணை.
100	அக்கினியில் நின்றுவிளை	துப்பாக்கி.
101	கிள்ளிக்கை பார்ப்பதுவும்	நாசிப்பொடி.
102	விரைந்துவிரிந்தாதிமுனே	சுருட்டு.
103	முரிப்பதுவும் பார்ப்பதுவும்	புகையிலை.
104	தாயாகிப் பிள்ளையைமேல்	அம்மி.
105	குலுக்குண்டு வலுக்கொண்டு	பதுமைக்கூத்து.
106	குடுகையைப்போல் வாயு	அகப்பை.
107	விரைக்காமற் பாத்தில்நீர்	உப்பு.
108	கங்கைநதி புனல்மூழ்கி	கருவாடு.
109	உடல்நீண்ட பாதமுண்டு	நாகசுரம்.
110	மோதிரமும் வளைபூணும்	செருப்பு.
111	வன்னவுடைப் பெண்ணர	வெள்ளாட்டுப்பால்.
112	தொட்டவுடன்தலைகுனிந்	மண்வெட்டி.
113	மாதமொருபூப்பூக்கும்	தேங்காய்
114	நீட்டியகால்முடக்காதாள்	ராட்டு
115	கூத்தாடியவளொருத்தி	கோரம்பாய்.
116	மங்கையர்கள் அதிமோக	மஞ்சள்கொத்து.
117	தானவரும் வானவரும்	இருமல்நோய்.
118	இருபேரும் ஒருவீட்டில்	டம்மானம்.
119	காந்தியுளபெண்புருடர்	சீட்டுவிளையாட்டு.
120	வாசல்வழிபோகாமற்	மிருதங்கம்.
121	செஞ்சொல்லோமூன்றெ	மெத்தை.
122	சக்கரத்தைத்தரித் திருப்பார்	குலாலன்மண்பாண்டம்.

உ

கடவுள் துணை.

விவேக விளக்க விநோத
விடுகவிப் பொக்கிஷம்

காப்பு—வெண்பா.

மாதுமையாள் பங்கன் வளருமது ராபுரிவாழ்
மாதுனக்குஞ் சங்கையிலா மற்றும்பூ—மாதுதிகழ்
எத்தலத்துள் ளோர்க்கும் இயம்பும் விடுகவிக்குக்
கத்தன் கரிமுகன்றுள் காப்பு.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

தாரணியில் இந்திரன்றன் பழியைத் தீர்த்த
சங்கரன்வாழ் திருமதுரா புரிநன் னாட்டில்
சீரணியுந் தேன்கதலி தேங்காய் மற்றும்
நெய்பால்சர்க் கரையமுது நிரம்பக் கொள்ளும்
ஆரணமும் அருளுமென்று குட்டிக்கொள்வர்
அரியகங்கை யதிலுதித்து மதிகமானேன்
காரணமாய்த் திருநீல கண்டன் தந்த
கணபதியு மல்லவிதைக் கழறு வீரே. (1)

வீறுவெள்ளை வாரணத்தின் சாபந்தீர்த்த
விமலன்வாழ் திருமதுரா புரிநன் னாட்டில்
ஆறுதலை பன்னிருகை யுள்ளான் மேலோ
ரானவரைக் காக்குங்கால் கான்மேற் கொண்டு
தேறுமயி லருகிருப்பான் அழக தாகச்
செம்பொன்னும் பட்டணிவான் களையைத்தீர்ப்பான்
கூறுபுகழ் அரியகும ரேச னல்ல
குவலயத்தி லிக்கதையைக் கூறுவீரே. (2)

சித்தர்புகழ் ஆலவாய் நகரங் காட்டும்
தேவனுறை திருமதுரா புரிநன் னாட்டில்
சித்தாடை யெடுத்துடுத்தும் சிறுபெண் ணல்ல
சிறுகநூ லணிந்திருக்கும் பார்ப்பாரல்ல
உத்தவுடற் கெண்ணெய்யிடும் வணிகரல்ல
உட்கழுத்தில் மணியுடைய எருது மல்ல
செத்தலர்தம் புரமெரித்தார் முன்னே நிற்கும்
சிறந்தநந்தி யதுவுமல்ல செப்பு வீரே. (3)

திக்குவென்ற தடாதகைப்பி ராட்டி யார்வந்
திடர்செய்வோன் திருமதுரா புரிநன் னாட்டில்
தக்கதொரு ஓடுடையான் பிள்ளை தின்னி
தனைப்பார்த்தன் கொண்டுசிலை தன்னை மோத
மிக்கபுனல் மகள்தளும்ப நகையுண் டானேன்
விடாய்த்தவிர்ப்பான் புகழரிய விண்ணோர்க்கன்பன்
முக்கணனும் முக்கண்ணு மல்ல கண்டாய்
மொய்குழலே இக்கதையை மொழிகு வாயே. (4)

வாரணியு முகிலுமைமீ னாட்சி தன்னை
மணந்தவன்வாழ் திருமதுரா புரிநன் னாட்டில்
நாரணனாய் நெடுமாலாய்த் தூது போந்து
நம்பினர்க்கு மழைகாத்து நடுக்குந்தீர்த்துத்
தாரணியிற் சகலகலை யறிந்தெல் லோர்க்கும்
சற்குணனாய் அமுதளித்துத் தான்வாங் காமற்
காரணமாய் நரைத்தலையன் பிறந்து வாழ்ந்த
கதைகேட்க மிகவுண்டு கழறு வீரே. (5)

தேவர்தொழுங் கூடல்வெள்ளி மன்று ளாடும்
செல்வனுறை திருமதுரா புரிநன் ஞட்டில்
மூவர்தமில் நடுப்பிறந்தோன் ஒண்டிக்காரன்
முன்னேன மாபுலகை யளக்குந்தீரன்
ஆவிடையின் பிறகிருந்து கட்டு முண்டு
அனைவரையும் ரட்சிக்க வந்த மாயன்
சேவகத்தில் வலியுடையான் கூர்மைக்காரன்
திருமாலு மல்லவிது செப்புவீரே. (6)

வள்ளையன்னஞ் சிறியகுண்டோ தரனுக்கிட்ட
வள்ளலுறை திருமதுரா புரிநன் ஞட்டில்
முள்ளுப்போ லேசிலிர்த்து முடித்த மூஞ்சி
மூவர்களுண் டோரகத்தில் முன்னாள் வாழ்ந்தார்
பிள்ளைக்குத் தாயூட்டி வளர்த்திட் டாலும்
பிரிவானுற் சேரார்கள் பேரெண்ணைக்கும்
குள்ளப்பெண் கொண்டைச்சி கறுப்பி குள்ளி
குலவிளக்கை யிப்போது கூறு வீரே. (7)

பொன்னூரும் வகையன்னக் குழியழைத்த
புண்ணியன்வாழ் திருமதுரா புரிநன் ஞட்டில்
முன்னாலே அருப்புண்டு கட்டுமுண்டு
முனைகுலைந்து பெண்களெல்லாம் சீச்சீயென்ன
பின்னாலே கிழிய லுண்டு தையலில்லாள்
பிடித்திருப்பாள் கைக்குள்ளாள் சுத்தக்காரி
சொன்னாலும் பேர்கொஞ்சம் வேலைக்காரி
சொகுசான விக்கதையைச் சொல்லுவீரே. (8)

சித்திரக்காஞ் சனையாடக் கடலேழ் தந்த
தென்னவன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
குத்துண்டு மிடியுண்டு வாயி னாலே
குண்டணியாய் அகந்தோறும் குந்திக்கொண்டும்
சத்துண்டு கருப்பிலையும் பஞ்சமில்லாள்
தலையதனில் ஓடுகொண்டு தளர்வில்லாமல்
மெய்த்தீண்டி யோடவிட்டா லுருண்டு போவான்
மெல்லியரே இக்கதையை விளம்புவீரே. (9)

அந்தரஞ்சேர் மலையத்து வசனை மீண்டும்
அழைத்தவன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
சுந்தரஞ்சேர் விழிக்கின்பம் பதுமையல்ல
சொற்பாலே குரலின்பம் குயிலுமல்ல
கந்தமல்ல பரிமளிக்கும் மூக்கிற்கின்பம்
கையினாற் றெட்டணிய உடலுக்கின்பம்
சந்ததமும் அருந்துதற்கு நாவுக்கின்பம்
சட்சுவையு மல்லவிது சாற்றுவீரே. (10)

துய்யவுக்ர பாண்டியன்வந் துதிக்கச்செய்த
தோன்றல்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
கையிலே தண்டுகொண்டு முன்னூல் பூண்டு
காணரிய குண்டலமும் கூர்மை மூக்கும்
வையகத்தில் தர்ப்பையுடன் நீரில் மூழ்கி
மந்திரிக்க வாராத வஸ்துவெல்லாம்
உய்யவிர விற்கொடுத்தும் பின்னேவாங்கும்
ஒருகொலைக்கும் அஞ்சானை யுரைத்திடீரே. (11)

நஞ்சயில்வேல் வளைசெண்டுக் கிரற்குத்தந்த
நாயகன்வாழ் திருமதுரா புரிநன் னாட்டில்
பிஞ்சுண்டு பூவாது கசங்கும் காயும்
பின்னலென வேயிருக்கும் கொடிகளெல்லாம்
துஞ்சிடவே நீரில்விழச் சுருட்டிக் கொள்ளும்
சூரியனைக் கண்டாக்கால் மலர்ந்திருக்கும்
பஞ்சவரும் அவருறவு மாலுக்காகார்
பாருலகி லிக்கதையைப் பகருவீரே. (12)

இரைகடல்நீர் சுவறவேல் விட்ட கோவை
யீன்றவன்வாழ் திருமதுரா புரிநன் னாட்டில்
அரியமர்ந்து நீர்கொள்ளக் கரையுமுண்டு
அதனிடையே நெய்தல்கொடி யதுவே காயும்
துரைகளுக்கு மதுவாகும் பஞ்சை பார்க்கில்
சொல்லாது பிஞ்சுவிடும் சொகுசதாகும்
நரைவடிவ மானாலும் நகையை நீங்காள்
நயம்பெறவே இக்கதையை நவிலுவீரே. (13)

அண்டர்கோன் முடிமீதில் வளையெறிந்தோன்
அத்தன்வாழ் திருமதுரா புரிநன் னாட்டில்
அண்டையிலே இருப்பனலங் காரமாக
அடிபெருத்தும் நுனிசிறுத்தும் அவளேசாணம்
கொண்டுதிரு வுருவெனவே யேற்றிப் போற்றும்
குவலயத்தோர் தன்னைமணக் கோலங்கொண்டு
தண்டிருக்க இருட்டினிலே அவளும் நிற்பாள்
தான்நடக்க மாட்டாளைச் சாற்றுவீரே. (14)

தங்கும்பொன் மலையைச்செண் டாலடித்தோன்
தந்தையுறை திருமதுரா புரிநன் ஞட்டில்
பைங்கொடியாள் வந்தவுடன் பந்தல் போட்டுப்
பாதத்தில் நீர் சொரியப் பருவமாகி
அங்கவளும் பூமுடித்து அழகதாக
அம்புவியி லோர்பேரும் பெற்று நல்ல
தொங்கலையு மீன்றெடுத்தாள் நீண்டமெய்யாள்
சூடுண்டாள் அலுப்புண்டாள் சொல்லுவீரே. (15)

சுத்தமறைப் பொருளைமா தவர்க்குச் சொன்ன
சோதியுறை திருமதுரா புரிநன்ஞட்டில்
மத்தொருத்தி யாகிறவள் குலத்தில் வந்தாள்
மடந்தையர்கைக் குள்ளானள் வஞ்சிமுன்னல்
குத்துண்டாள் அறுப்புண்டாள் கட்டுமுண்டாள்
கொம்பனையார் பணயமிட்டுக் கொள்ளவந்தாள்
இத்தனைக்கும் பொறுத்திருப்பாள் வேலைக்காரி
ஏந்திழையை இன்னவளென் றியம்புவீரே. (16)

தக்கபாண் டியற்குமா ணிக்கம்விற்ற
சங்கரன்வாழ் திருமதுராபுரிநன் ஞட்டில்
கைக்கடக்க மானமின்னள் சட்டவட்டம்
கங்கைகுல மெனலாமே கையிற்பற்ற
மிக்கதொரு நகைதோன்றும் சொகுசுகாரி
வேந்தர்களும் பார்க்கநிற்பாள் வெட்கமில்லாள்
பக்குவமாம் வடிவுடையாள் மின்னலுண்டு
பரத்தையல்ல இங்கிதனைப் பகருவீரே. (17)

வருணன்னிட்ட கடலதனை வற்றச்செய்த
மாதவன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
இருபுறமுந் தையலுடன் எருதி லேறி
இச்சையாய்ப் படைத்ததெலாம் ஏற்றுக்கொண்டு
பரிவுடனே நடமாடித் திரிந்தலைந்து
பலர்பாலுந் தையலரை பாரில்விட்டுப்
பிரியமுள்ள தாசருக்குத் தாசராகும்
பெருமாளு மல்லவிதைப் பேசுவீரே. (18)

போற்றருநான் மாடக்கூடற் புரிந்த
புண்ணியன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
சாற்றரிய புகழ்படைத்த காவலாளன்
தானுமொரு காலில்நின்று தவங்கோணாது
சேர்த்தபல கையுடனே நடப்பான்சற்றே
சிக்கினு லவன்றுளான் தெருவிலேகான்
பார்த்தவர்கள் ஒருபுறத்தே படாநிற்பான்
பாருலகி லிக்கதையைப் பகருவீரே. (19)

மானமுதல் நீத்ததெல்லாம் வல்லசித்தர்
வடிவுளன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
மானிலத்திற் பிறந்திளமை யாகிமிக்க
மருவுசடை முடியணிந்து மகிமையாக
ஞானியர்கள் தன்னிடத்திற் பிரியமாகி
நன்மைமிகு மோங்கார மாகக்கூடி
ஆனபெரி யோர்களெல்லாம் வேண்டிக்கொள்ள
அழலுருவாய் நின்றவனை யறிந்துசொல்லே (20)

சீலமுடன் கல்லானை கரும்புதின்னச்
செய்தவன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
காலுண்டு விட்டுவிட்டால் ஓடிப்பாயும்
கழனியென்றாற் கொண்டாட்டங் கட்டநிற்கும்
பாலுண்டு வளர்ந்ததல்ல கொம்புமுண்டு
பாங்குடைய வாயுமுண்டு பருகிவாழும்
சேலுண்ட விழிமாதே பசுமாடல்ல
தெளிவாக இக்கதையைச் செப்புவாயே. (21)

மாலமணர் ஏவுமத யானையெய்த
வள்ளலுறை திருமதுரா புரிநன்னாட்டில்
மூலமாய் நெடியவராய் மலையில் வாழ்ந்து
முன்னமிர்தந் தனைக்கடந்து முறைமையாக
ஞாலமதி லுலகளந்து படியளந்து
நாட்டிற்கோ தண்டமெனும் நாரிக்கன்பன்
கோலமுள வெண்டிசையிற் குழலுமூதும்
கொற்றவனை யிப்பொழுது கூறுவாயே. (22)

மாவிருத்த குமாரபா லகராய் வந்த
வள்ளலுறை திருமதுரா புரிநன்னாட்டில்
பூவிலிவர் மாலாகித் தொங்கலாகிப்
பொய்யுடலாய்த் தசைவேறாய்ப் புவன மீதில்
பாவையர்கட் குள்ளாகி யிடியும் பட்டுப்
பன்னுசுவைக் கொருவனெனப் பேரும் பெற்றுத்
தேவருக்கும் ஒளிவிளங்கப் பணியேசெய்யும்
சிந்தையைநா மறிந்திடவே செப்புவீரே. (23)

தரைபாண்டி யருக்காகக் கான்மாறி யாடும்
சங்கரன்வாழ் திருமதுரா புரிநன் ஞட்டில்
அரன்வடிவாய் முன்மூலம் அடிக்குத்தாளான்
அவன்பசுமை யாவருக்குங் காயக்காரன்
திரமில்லா மரமுடையா னவனேங்காரன்
சிரமேறி வீதிதன்னில் உலாவிப்பாரில்
வரவெவரும் தான்சேர்த்துப் பணயம் வாங்கும்
மகிமையுளான் இக்கதையை வழுத்துவீரே. (24)

பன்னரிய பழியஞ்சு மரணத்தேற்றம்
பண்ணவன்வாழ் திருமதுரா புரிநன் ஞட்டில்
கன்னனுமர்ச் சுனனுமவ ரொருத்திபிள்ளை
காரணத்தா லேபிரிந்து கடியபூசல்
பன்னுமத கரிபரிதேர் சேனைமாளப்
பற்குணனூற் கட்டுண்டு பலபேர்முன்னே
மன்னவர்கள் தலையிரங்கப் பாடிவீட்டில்
மருவியவர் வீற்றிருந்தார் வழுத்துவீரே. (25)

பாவமெனும் மாபாத கத்தைத் தீர்த்த
பண்ணவன்வாழ் திருமதுரா புரிநன் ஞட்டில்
மூவர்களுண் டோரகத்திற் பிறந்த மன்னர்
முத்திரைக்குக் கர்த்தராய் மூடுதற்கும்
காவலர்க ளிருவருமாய்க் கூடிவாழ்ந்தார்
கடைசியிலே ஒருவனவன் கலக்கமிட்டுப்
போவதற்கு முட்புகுந்து வேறுசெய்தான்
புவியதனி லிக்கதையைப் புகலுவீரே. (26)

விஞ்சையரு ளினத்தீங்கு புரிந்தோனங்கம்
வெட்டினன்வாழ் திருமதுரா புரிநன் னாட்டில்
பஞ்சவர்ணக் கிளிபோலக் கொஞ்சவல்லாள்
பாவலர்க ளருகிருந்து பாலின்சொல்லாள்
மிஞ்சுதனம் பொற்சீலை மூடிக்கொள்வாள்
மின்னுடையாள் வேழம்பேர் மிகுத்தநாரி
தஞ்சமென்பார் மிகத்தழுவும் சொகுசுக்காரி
தையலரள் அறிகுறியைச் சாற்றுவீரே. (27)

இகலமணர் விடுமரவை யெதிர்த்துக்கொன்ற
எந்தையுறை திருமதுரா புரிநன்னாட்டில்
இகலுடனே அண்டத்தி லிருந்து வந்தே
இளையவற்கு மன்னவனும் எவருமேற்றச்
செகமுழுதுந் தழல் வடிவாய் சுத்தனாகிச்
சிவனென்றும் அவனென்றும் வேறில்லாமல்
புகலரிய சிவஞானம் நிறைந்திருக்கும்
பூக்குமது பழமுண்டு புகலுவீரே. (28)

புத்தர்விடும் அத்திவர வதை வதைத்த
புங்கவன்வாழ் திருமதுரா புரிநன் னாட்டில்
சித்தாடை யுடன்பிறந்த சிவப்பிகுள்ளி
சிலரறுக்க உதையும்பட் டடியும்பட்டுக்
குத்துண்டுந் தூற்றுதற்கு முடம்பெடுத்தும்
கோதையர்கள் ஒன்றாகக் கூட்டுமென்ன
மத்துமவள் பரிதிகுலத் தாகிப்பின்பு
மதிக்குலமு மானவளை வழுத்துவீரே. (29)

சிருறுமெய்க் காட்டிவிளை யாடல்செய்த
செல்வனுறை திருமதுரா புரிநன் ஞட்டில்
வாருவார் கூடுபுகுஞ் சென்னி சேர்ப்பார்
வையகத்தோர் செய்யமுதாம் வருத்தந்தீரப்
பாருலகந் தாழ்ந்தவிடம் பார்த்துச்சேர்வார்
பாய்ச்சலூர் கால்வழியே பறந்து வந்தே
நேருமிலை யெனக்கென்பார் அனைவர்க்கன்பன்
நீரிவரை யிப்பொழுதே நிகழ்த்து வீரே. (30)

உலவாநற் கிழியொன்று கன்னிநாடற்
குதவினன்வாழ் திருமதுரா புரிநன் ஞட்டில்
குலைகாரன் உரிபுணியன் வெட்டுக் கஞ்சான்
கொள்ளல் விற்றல் வியாபாரி கொடியோனல்ல
விலைமாதர்க் கன்புடையோனினத்தைச் சேர்ப்பன்
மெய்யுடனே யாவருமே வேண்டிக்கொள்ள
புலவர்க்கும் வேதியர்க்கும் தேவருக்கும்
பொருத்தமுண்டாம் வருத்தமிலை புகலுவீரே. (31)

சீருண்ட மங்கையர்க்கு வளையல் விற்ற
செம்மலுறை திருமதுரா புரிநன்ஞட்டில்
நீரேறத் தலையாகும் வாலுங்கூழை
நிற்பதுகீ ழிருகாலு மொருகான்மேலே
சீருடனே ஒருகாலில் நடக்கும்போது
திடமாக மெலிரண்டாட் சுமைசுமக்கும்
வாரணியுங் கொம்புமுள தோடிப்பாயும்
வண்மையுள விக்கதையை வழுத்துவீரே. (32)

போற்றியமா தர்க்கட்ட சித்தியீந்த
புண்ணியன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
பாற்றுழிக்கு மொருகுடுமி கண்ணப்பன்பேர்
பாதியுருவமைந்துமுழக் கோலுங்கொண்டு
ஆற்றுவான் நீர்மீட்பான் நீரின் மூழ்கி
அறுசுவையு மறிந்திருப்பான் வெந்நீர்க்கஞ்சான்
வேற்றவர்க்கும் விடாய்தீர்ப்பான் பகவானல்ல
மெல்லியர்கைக் குள்ளாவான் விளம்புவீரே. (33)

இட்டவிடை யிணைச்சிணைமுன் விட்டநித்தன்
ஈசனுறை திருமதுரா புரிநன்னாட்டில்
வட்டமா மதியெனவே நீறுபூசி
மகிழ்ந்துதினம் நீர்குளித்து மடந்தைமார்கள்
இட்டபே ரின்பமுடன் அடிசிலுண்டும்
இருப்பார்கா ணவட்குறவு எங்குமுண்டு
தட்டவே கூப்பிடுவாள் தொடவேநிற்பாள்
தாரணியி லிக்கதையைச் சாற்றுவீரே. (34)

வளவனுக்கும் படைக்குநீர்ப் பந்தல்வைத்த
வரதனுறை திருமதுரா புரிநன்னாட்டில்
வளையிருந்தே தலைநீட்டும் அண்டிக்கொள்ளும்
மந்திரத்தா லேதடுக்க வசப்படாது
உளையாத் கைமருந்து கொடுத்தால் மீளும்
உகந்தணைந்தா லதுமெள்ள எட்டிப்பார்க்கும்
முளரிநண்பன் பிறந்திடவே வளைக்குள்ளேபோம்
மொய்குழலே இக்கதையை மொழிகுவாயே. (35)

அருமைமிகும் ரசவாதம்அன் றுசெய்த
அண்ண லுறை திருமதுரா புரிநன் னாட்டில்
பெருவயிறன் செவியுடையான் கதிர் குலத்தான்
பேசுவான் குரல்நெருங்கிப்பெண்டிர்க்கன்பன்
அரிவையர்முன் றலைவிரித்துச் சுழற்றியாடி
அவனிதனிற் சாத்திர நூ லறிந்தஞானி
இருநிலமுந் தனதெனத்தோ ரணங்கள் கட்டி
இருப்பவனை யின்னவனென் றியம்புவாயே. (36)

பொருமிகவிழ் சோழனைமுன் மடுவில்மீட்டும்
பூரணன்வாழ் திருமதுரா புரிநன் னாட்டில்
திருவணையி லேவருவார் பார்பாரென்பார்
திடுக்கெனவே மெத்தையின்மேற் சிலர்கள்தம்மை
பரிவுடனே துயிலவொட்டார் செந்நீ ருண்பார்
பார்க்கவே யொளித்திடுவா ரோடிப்போவார்
ஒருவருக்கும் அஞ்சார்கள் கொடுமையாளர்
உத்தமியே இக்கதையை உரைசெய்வாயே. (37)

தென்னவனுக் கேவுலவாக் கோட்டை யீந்த
திண்ணியன்வாழ் திருமதுரா புரிநன் னாட்டில்
முன்னிருந்து பூசைகொளுந் தேவராகும்
முதற்காசுக் கதிபதியாம் மூலமாகும்
பன்னிரண்டி லொருவனுமாய் மறையோர் போற்றப்
பலபேர்க்கும் அமுதளித்துப் பரிந்து கொள்ளச்
சென்னிமிசை நீரெடுத்து நடனஞ் செய்வோன்
சிவனுமல்ல இங்கிதனைச் செப்புவீரே. (38)

ஒருவணிகற் கம்மானுய் வழக்குத் தீர்த்த
உத்தமன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
ஒருகலெனும் பொருளுமது கொள்ளுமென்றே
ஒருகுட்டி யுடன்வந்தே உளநாளெல்லாம்
இருகையினு லோட்டினல் ஓடுங்குட்டி
இருந்தஇடம் அகலாம லீன்றதாயும்
பருகநீர் காரமுடன் கவ்வும் கொள்ளும்
பரியுமல்ல இங்கிதனைப் பகருவீரே. (39)

காக்கும்வர குணனுக்குச் சிவலோகத்தைக்
காட்டினன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
மூக்குண்டு வாயுண்டு கழுத்துமுண்டு
முன்பன்னை யாவருக்கும் முகமலர்ந்து
தேக்கவே தனையான தியக்கந்திரும்
செந்தீயின் மூழ்கிவந்து மணமுஞ்செய்வாள்
நாக்கில்லை யுதடுண்டு காத்துவந்த
நாயகியை இன்னதென்று நவிலுவாயே. (40)

புலமைகொளும் பாணனுக்கு விறகுவிற்ற
புண்ணியன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
தலைவியெனுங் கண்ணாட்டி யருகேவாழ்வாள்
தண்டுகொண்டு குலைசாய்ப்பாள் சகலருக்கும்
இலைபென்பாள் அமுதுண்பாள் மலரைச்சேர்க்க
இசைந்தவள்காண் குலநாரி யேற்றவர்க்கும்
விலைமாது மதுரமுள்ள காயக்காரி
வேசியல்ல இக்கதையை விளம்புவாயே. (41)

மட்டில்லாத் திருமுகமோர் சேரற்கீந்த
வள்ளல்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
எட்டெட்டுக் காய்பசுமை மஞ்சளாகும்
இனியசிவப் புடன்கறுப்புமிருபா லாகும்
வெட்டுமென வெழுந்திருக்கும் பழம்பழுக்கும்
விழுமெடுப்பார் தின்னார்கள் வீடுசேர்ப்பார்
கட்டுவர்க ளிருவருண்டு குறிப்பதாகிக்
கண்பார்க்கக் கைசெய்யுங் கழறுவீரே. (42)

திட்டமுள்ள பலகையொன்று வாணற்கீந்த
தேவனுறை திருமதுரா புரிநன்னாட்டில்
பட்டத்துத் தேவியவள் சொகுசுக்காரி
பரிகாரி யிளங்கொடியாள் பாரின்மீது
கட்டுதற்கும் அளைப்பதற்கும் கிள்ளுதற்கும்
கட்டழகி பொறுத்திருப்பாள் காசுக்கென்றால்
இட்டமுட னேவருவாள் தாசியல்ல
எந்திழையே இன்னவளென் றியம்புவீரே. (43)

விறலியைத்தன் னிறைவருட்கொண் டிசையில்வென்ற
வேதியன்வாழ் திருமதுரா புரிநன் னாட்டில்
முறுக்கிக்கொண் டேயிருப்பாள் அவள்பேர் தொங்கி
முடியவே தனைப்பிடித்து மேலேசேர்வாள்
இறுக்கியபின் னடிசிறுத்துக் குடுவைதூக்கி
எடுத்துக்கொண்டேயிருப்பாள் ஏலுமட்டும்
கறிக்கிடுவாள் பலபொருளும் வைத்திருப்பாள்
கன்னியல்ல விக்கதையைக் கழறுவீரே. (44)

அடல்பன்றிக் குருளைக்கு முலைதந்தாவி
யளித்தவன்வாழ் திருமதுரா புரிநன் னாட்டில்
அடவியிலே இருந்துவந்து தையலாகி
அரியகங்கை தனையாடி யமுதங்கொண்டு
மடமயிலாள் கைப்பற்ற வப்பாலேகி
மாருதியைச் சேர்ந்துறவாய் மகிழ்ந்தேயாடிப்
படபடெனப் திரியுமது வீதிதோறும்
பாரினிலே இக்கதையைப் பகருவீரே. (45)

உருவளரக் குருளையைமந் திரிகளாக்கும்
உத்தமன்வாழ் திருமதுரா புரிநன் னாட்டில்
இருபுறமுந் தடித்திடவே நடுவேகூர்மை
எப்பொருளும் பகர்ந்திடுங்கோ லெனுங்கைப்பற்ற
மருவுமுடி யிருநான்கு வடங்கள் தொங்க
வந்தவர்கள் தந்ததெல்லாம் வாங்கிக்கொண்டு
தருமவர்கள் கேட்டதெலாம் அளிப்பேனென்று
தலைக்கடையி லேயிருக்கும் சாற்றுவீரே. (46)

சிருலவுங் கருங்குருவிக் குபதேசித்த
தேசிகன்வாழ் திருமதுரா புரிநன் னாட்டில்
நீருமவன் பேருரைக்கச் சத்தங் காணும்
நெய்பால்சர்க் கரையமுது நிறையநிற்கும்
ஆரும்மகி ழாமல்கலத் தடிசிலுண்டு
யாவருக்கும் ஆகாதான் அமிர்தச்சென்னி
பேருமொரு லிபிகாணும் எங்குமுண்டு
பேதமில்லை யிங்கிதனைப் பேசுவீரே. (47)

பார்த்தந்த நாரைக்குப் பரத்தையீந்த
பரமன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
போர்க்களத்தி லேபுகுந்து கையாற்பற்றிப்
புலிபோல வேபாய்ந்து விருதுபாடி
ஏர்க்கவே என்வாய்க்கே எதிர்வாய்கேட்க
எனக்குமேற் பெரியோர்கள் இல்லையென்று
மார்க்கமாய் வீடுதன்னைத் தாங்கவல்லான்
மாதரசே இக்கதையை வழுத்துவீரே. (48)

அரவினாற் கன்னிபுரத் தாலவாயாய்
அழைத்தவன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
கரிவடிவாய்த் தழலுருவாய் நீருபூத்துக்
கங்கையைவிட் டகலாமற் கீர்த்தியாகப்
பிரியமுடன் மூவருக்குள் ளொருவனாகிப்
பேருலகில் ஆலயத்தில் நிறைந்திருப்பான்
பரிவுடனே சிறுகாயி லமர்ந்திருப்பான்
பரமனல்ல இங்கிதனைப் பகருவீரே. (49)

ஒருவனவன் படைக்கெதிர்சுந் தரப்பேரம்பை.
உய்த்தவன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
ஒருகுலத்திற் பிறந்தவர்கள் இருவர்தாமுண்
டொருத்தியவள் துயிலணிந்து நீறுபூசி
மருவிடவே மேலானாள் காதுகுத்தி
மாதர்முனே சிவமாடி வாயினாலே
அருவையிட வேவிழுங்கி வெவ்வேறுக்கும்
ஆயிழையே யின்னவளென் றறைகுவாயே. (50)

ஐயமில்சங் கத்தார்க்குப் பலகையீந்த
அற்புதன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
மெய்யிலா தாட்கன்பன் வினையைநீக்கி
மேலாகி முடிமீதில் விளங்கியாடித்
துய்யகுறை யாளருக்குத் துயிலுமாகிச்
சுவைமலராய் மீனவர்க்குத் தொடையலாகிக்
கையில் மலர்ந் திரந்துண்டும் அரசைச்சேர்ந்து
காத்தவன்கா ணிங்கிதனைக் கழறுவீரே. (51)

நிலைமைபெறத் தருமிக்குக் கிழியறுத்த
நிராமயன்வாழ் திருமதுரா புரிநன் னாட்டில்
பலவுருவாய் பலபொருளாய்த் திரிவர்மன்னப்
பாராள ரரியுருவாய்ப் பலருஞ்சேர்க்கக்
குலமதிகமெனவுரைப்பார் இடைபாரென்பார்
குவலயத்தி லிவர்க்கிணையார் கூறுமென்பார்
நலம்பெறவே வாழ்விக்க வல்லதீரன்
நங்கைபே ரிங்கிதனை நவிலுவீரே. (52)

வாக்கில்வல கீரனைமுன் கரையையேற்றி
வைத்தவன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
பூர்க்குமது வேண்டினவர் முடியிலேறும்
புவனம்விலை யாய்க்கொள்ளும் புவியின்மீது
ஆர்க்குமினி தானவஸ்து மிகுத்தவாழி
அப்பாலே அவதரிக்கும் அளந்துகொள்வார்
நீர்க்குத்தான் கரையுமது மூலைசேரும்
நிறம்வெண்மை நேரிழையே நிகழ்த்துவாயே. (53)

முற்றவிலக் கணங்கீரற் குபதேசித்த
முன்னவன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
சிற்றமுதுக்குற்றிடுநற் றிறமையாளர்
தேசமெங்கும் பிறந்துண்பா ரோடுகொண்டு
பற்றினரைக் கரையேற்றி விடுவதல்லாற்
பாவலர்கண் முன்னிருந்து பலுக்கவல்லான்
வித்துயர்ந்த கொடியுடையோன் காயக்காரன்
வேண்டினவர்க் கன்பனேநீர் விளம்புவீரே. (54)

வாழ்வுதரும் சங்கத்தார் கலகந்தீர்த்த
வள்ளலுறை திருமதுரா புரிநன்னாட்டில்
ஆழியிலே பிறந்துவந்த திருவாம் நங்கை
அமுதளிப்பாள் ஆழியுமாய் ஆரமாவாள்
ஏழையவள் சிவபூசை மகிழ்ந்து செய்வாள்
இயலுடனே மூக்குத்தி பணியாய்ப்பூண்டு
வாழ்பவளை முத்தியிட்டால் கூவிநிற்பாள்
வஞ்சியரை இன்னதென்று வழுத்துவீரே. (55)

சித்தனெனும் இடைக்காடன் பிணக்குத் தீர்த்த
தேவனுறை திருமதுரா புரிநன்னாட்டில்
தெத்துண்டும் ஈறுழையாக் காடுதன்னிற்
சிலருண்டு துன்மார்க்கஞ் செய்யவல்லார்
மத்தவரை யிரைந்து பேர்கள்போந்து
வலுவுடனே வழிகட்டி யிருவராலே
குத்துண்டுங் குடல்சரிந்தும் பற்றறூர்கள்
கோதையரே இக்கதையைக் கூறுவாயே. (56)

வேலைவலை வீசியொரு மானைமன்றல்
விழைத்தவன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
காலுமூன் றதிசயமுண் டெவருங்காணக்
கலமெடுப்பான் குறியுடையான் மணத்துக்காகச்
சாலருகே தானிருப்பான் முன்வெட்டுண்ணி
தானெடுக்கமாட்டாம லெடுக்கச் சொல்வான்
மேலாகப் பலசுவையு மறிந்துகொள்வான்
மெல்லியரே இக்கதையை விளம்புவீரே. (57)

இட்டமுடன் மாணிக்கற் குபதேசித்த
ஈசனுறை திருமதுரா புரிநன்னாட்டில்
வெட்டுண்டு கட்டுண்டு புவியின்மீது
விழுந்தவுடனே யடுக்கப் பலரைச்சேர்ப்பான்
மட்டுமிரி யாதையிலை ஜலமேற்கொள்வான்
மங்கையரைத் தலைகுனியப் பண்ணிவைப்பான்
சொட்டுவிழக் கால்பரப்பிப் பாட்டுக்கேட்டும்
சொற்கேளான் இங்கிதனைச் சொல்லுவீரே. (58)

வெறித்தநரித் திரளைபரி யாக்கிவிட்ட
விமலனுறை திருமதுரா புரிநன்னாட்டில்
அறுப்புண்டுங் குத்துண்டுங் கட்டுண்டும்பின்
னவள்சாணிப் பலகாலும் உதைப்பார்க் கஞ்சாள்
சிறுக்கிவளை யாழியிட்டுப் பணியும்பூணச்
சேர்ந்திடுவா ருடன்கூடித் திறமையாகக்
கறுத்தநிற மானதையல் பணையந்தந்தால்
கட்டழகி சேர்ந்திடுவாள் கழறுவீரே. (59)

கோலமுறும் பரிகளைமுன் நரிகளாக்கும்
　　கோதிலன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
காலாறு கண்ணாறு காது நாலு
　　கையிரண்டு வாலொன்று கொம்புநாலு
மேலான வாய்நாலு பலரும் பார்க்க
　　வீதியினி லடிபடவோ மிகவுங்கூவும்
மேலேறு வார்கூட வறியச் சொன்னேன்
　　விருப்பமுட னிக்கதையை விளம்புவீரே. (60)

மண்சுமந்து மேனிமேல் வடுச்சுமந்த
　　மாசிலன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
பண்பாடி யந்தரத்திற் பறந்துசாடும்
　　பழையபடி கீழிரங்கும் பாலரெல்லாம்
அண்ணாந்து பார்த்துமன மகிழ்வதாக
　　அரசரது திருநாம மிவருக்குள்ளே
செண்டாடுந் திரிநூலும் வாலுமுண்டு
　　சேயிழையே இக்கதையைச் செப்புவாயே. (61)

வெத்திகூன் பாண்டியற்குச் சுரத்தைத்தீர்த்த
　　விமலன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
மத்தொருவ ரையுஞ்சேரா ள் படுக்கைக்காவாள்
　　வருவாய்நார் கட்டுதற்கும் வணங்கிநிற்பாள்
முத்தாகிப் பசுநிறமாய்ப் பவளமாகி
　　முழுநீல மாயரிவை முடியிலேறி
வித்தான பேர்களுக்கும் இன்பமாவாள்
　　மேல்முடியு முண்டவட்கு விளம்புவீரே. (62)

மாறுசெயுஞ் சமணரைமுன் கழுவிலேற்றி
மகிழ்ந்தவன்வாழ் திருமதுரா புரிநன்னாட்டில்
நீறணிந்த மெஞ்ஞானி தோலைப் போர்த்தோன்
நீர்கொண்டு நிதிதானஞ் செய்தபேர்க்குக்
கூறிடவே அரியென்றும் பிரமனென்றும்
கூற்றையுதைத் தோனென்றுங் கொண்டகோலம்
ஏறுநதிக் கொடியுடையோன் மடந்தைமார்கள்
என்செய்தா லும்பிரியான் இயம்புவீரே. (63)

கடுவன்னிக் கிணறுமிலிங் கமுமழைத்த
கர்த்தனுறை திருமதுரா புரிநன்னாட்டில்
குடுகுடென்று கர்ச்சித்து நீரையேற்றும்
கும்பமதி லேயிரைக்குங் குவலயத்தில்
அடவியிலும் போயிரங்கும் இருண்டமேனி
அனைவரையும் அதுதாங்கும் அடித்துச்சாடும்
கடலுலகம் பார்த்தவிட மெல்லாங்காணும்
கரியுமல்ல இங்கிதனைக் கழறுவீரே. (64)

திருமதுரா புரியில்வளர் சொக்கநாதர்
செய்ததிரு விளையாடல் அறுபான்நான்கும்
சுருதிவழி கண்டறிந்த பெரியோர்முன்னே
சோச்சிசொலுங் குதலைமொழி குழறலொக்கும்
ஒருவாறிவ் விநோதவிடு கதையீதாகும்
உலகத்தோ ரெல்லோரும் ஒப்பவேண்டும்
கருதியின்னங் கதைசிலது கட்டுரைக்கக்
கவிவாணர்பதம்பணிந்து கழறுவேனே. (65)

வருங்காலம் நிகழ்ந்துரைப்பான் சாஸ்திரியல்ல
வாங்கியுண்ண வழிபார்ப்பான் மூடவனல்ல
சுரும்புமுகர் மலர்முடிப்பான் சுதனுமல்ல
துகளில்பசும் புல்சுமப்பான் தோட்டியல்ல
பருமனுடல் நீறணிவான் பரமனல்ல
பலரில்லம் புசிக்கும்பர தேசியல்ல
பொருந்துவனக் கிளிபோன்ற மொழியினாளே
புகழுண்டாம் இக்கதையைப் புகலுவாயே. (66)

கூத்திதனக் கேயலைவான் குடியனல்ல
குலமில்லாக் குலம்புகுந்தான் மிடியனல்ல
வாத்திதனை யேபழித்தான் வம்பனல்ல
மயில்கோழி தனைவளர்ப்பான் மறவனல்ல
தேத்துந்தேன் தினையுண்பான் வேடனல்ல
திகழ்வேடந் தான்தரித்தான் சித்தனல்ல
பூத்தமலர்க் கணையுடையான் தேவிபோன்ற
பொற்கொடியே இக்கதையைப் புகலுவாயே. (67)

காணுதற்குக் கண்ணில்படான் மறைந்து போகான்
கனபூதம் மனிதரிடம் சஞ்சரிப்பான்
பூணுதற்கு வஸ்திரநீர் பரிகரிப்பான்
புவியெங்கும் போர்புரிந்து கோஷ்டங்கொள்வான்
கோணுதற்கோர் மேருவையும் வேர்பறிப்பான்
கொடிபலத்த தருக்களையும் ஒடியச்செய்வான்
வேணும்பேர்க் கானந்தம் விளையச் செய்வான்
விபரமா யிக்கதையை விளம்பு வாயே. (68)

ஈரிரண்டு கம்பமுண்டு மண்டபமுமல்ல
இலைபரித்தும் குலைசாய்க்கும் வாழையல்ல
கோரகொம்பு தனையேந்தும் வேடனல்ல
கூசாம லேபுடைக்கும் முறமுமல்ல
தாரைகுழை மிகவிருக்கும் ஜலதாரையல்ல
தட்டிகரம் பூவிளக்குந் துடப்பமல்ல
சாரமுற விக்கதையின் பொருளைச் சொன்னால்
தையலரிற் சமர்த்தியெனச் சாற்றலாமே. (69)

கட்டியடித் தேயகற்றுங் கதிருமல்ல
கால்மாறிப் பாயவிடும் வாய்க்கா லல்ல
வெட்டிமறித்தே திரும்பும் படையுமல்ல
விலங்கினத்தின் தோல்சுமக்கும் பொதியுமல்ல
பட்டமுடன் முடிதரிக்கும் வேந்தனல்ல
பலநாளும் இரும்பையுண்ணும் பசிதீராது
துட்டமதன் போர்ஜெயிக்கும் வடிவினாளே
சொற்பமல்ல இக்கதையைச் சொல்லுவாயே. (70)

கொண்டையிட்டுத் தான்மினுக்கும் கூத்தியல்ல
குலவுமணி கழுத்திடுங் குறத்தியல்ல
துண்டுபல வரைகளுண்டு புலியுமல்ல
தோன்றும்வளை கொம்புமுண்டும் மரமுமல்ல
செண்டிப்பூ கொளம்புமுண்டு நதியுமல்ல
சிலம்புகொப்பித் தார்தரிக்கும் சித்தரல்ல
வண்டுநிகர் விழியாளே மகிழ்வாய் நீயும்
வல்லமையா மிக்கதையை வழுத்துவாயே. (71)

கிட்டநின்ருல் கெட்டிவிடும் பறவையல்ல
கேவலமாய் ஒடுங்கிநிற்கும் பஞ்சையல்ல
கட்டுதுணி ஜவுளிகொள்ளுஞ் செட்டியல்ல
கனத்தமுத்துக் கல்லெடுக்குங் கவரையல்ல
குட்டியிட்டுச் சுவரிலொண்டுந் தேளுமல்ல
குலத்திலே யிகழ்ச்சியென்பார் புலையனல்ல
வட்டமதி போலிருக்கும் முகத்தினுளே
மகிழ்வாயிக் கதைப்பயனை வழுத்துவாயே. (72)

121055

குலைகுலைக்கும் அழகலுண்டுந் தென்னையல்ல
குலத்திலிசைந் தொழுகாத வேசியல்ல
வலியசண்டை யேயிழுக்கும் வம்பனல்ல
மனைபுகுந்தும் அடிக்கஞ்சாத் திருடனல்ல
அலைந்துமிகத் தான்திரியும் பித்தனல்ல
அதட்டிநின்ருல் கால்தூக்கிக் காட்டிச்செல்லும்
கலைபோல வேமிரளும் விழியினுளே
கருத்தாயிக் கதைப்பயனைக் கழறுவாயே. (73)

பள்ளம்வெட்டிக் குழிபறிக்கும் ஒட்டனல்ல
பருத்தகறுங் கிழங்கெடுக்கும் வில்லியல்ல
பிள்ளைகளைப் பெருகவைக்கும் பிரமனல்ல
பேதையிடஞ் சஞ்சரிக்கும் பிடியனல்ல
உள்ளதெல்லாம் வாங்கியுண்ணுந் தொழும்பனல்ல
ஊர்சுற்றிப் படுத்திடுவான் உறங்கமாட்டான்
கள்ளமில்லை இக்கதையின் கருத்தைச்சொன்னல்
கற்றுணர்ந்த கவிஞரெனக் கருதுவோமே. (74)

பார்த்துமுகம் பல்காட்டுங்கண் ணாடியல்ல
பசங்களிடம் சேட்டைசெயும் வேசியல்ல
கூத்தாடிப் பணம் பறிக்கும் தாசியல்ல
குந்திசற்று மிருக்காது நாயுமல்ல
பேரத்துகின்ற கொடியாகும் பூமியல்ல
போர்புரிந்து ஜெயமடையும் விஜயனல்ல
சாத்துகின்ற விக்கதையின் பயனைச் சொன்னால்
சரணமென்றே அவரடியைச் சாரலாமே. (75)

படுக்கைக்கே அரைதேடுங் கத்தியல்ல
பாலுக்குப்பாத் திரந்தேடும் பசுவுமல்ல
துடுக்குக்கே இருள்தேடுங் குத்தியல்ல
சொல்லுக்கே பதுங்கிநிற்குந் தோகையல்ல
இடுக்குக்கே தானோடுந் தேளுமல்ல
இறைச்சிக்கே வழிபார்க்கும் நாயுமல்ல
அடுக்கோரம் இருந்துவரும் நாழியல்ல
அற்புதமா யிக்கதையை அழிப்பாய் நீயே. (76)

நீலக்கண் ணாடிகொள்ளும் கவரையல்ல
நேர்த்தியுடன் தான்விரிக்குங் கடையுமல்ல
கால்தூக்கி நடனமிடுங் காளியல்ல
கால்கொண்டே பாம்பாட்டும் ஜோகியல்ல
மேல்நிறைந்த பொட்டுமுண்டும் வானமல்ல
மேன்மைமிகக் கொண்டாடும் வேந்தனல்ல
பாலுக்கு நிகரான மொழியினளே
பத்மினியே இக்கதையைப் பகருவாயே. (77)

பச்சைநிற மேனியுண்டு விஜயனல்ல
பவளவிதழ் வாயுமுண்டு கோவையல்ல
உச்சிதலை யுரோமமுண்டு மைனாவல்ல
உட்கழுத்தில் நீலமுண்டு பரமனல்ல
இச்சையுடன் சிறையிலிடுந் திருடனல்ல
இனியமொழி தான்புகலும் மனிதனல்ல
கச்சைதனக் கேஅடங்காத் தனத்தினாளே
காதலுடன் இக்கதையைக் கழறுவாயே. (78)

கருத்தகரு நிறத்துடையோன் காலனல்ல
கண்கவிழ்ந்தே பார்வையுறுங் கபோதியல்ல
திரிச்சலென்ன குடிபுக்கும் மடந்தையல்ல
சிறுவரிடம் பறித்துண்ணுந் திருடனல்ல
தருபரிசுக் கேஅலைவான் பாப்பானல்ல
தான்பார்க்கக் கொள்ளைகொள்வான்கபடனல்ல
திருமகளுக் கொப்பான செல்வமாதே
சிறந்திடுமிக் கதைப்பயனைத்தெரிவிப்பாயே (79)

மண்மிதித்து மேற்றளைக்கும் குயவனல்ல
மதித்துவயல் நெல்காக்கும் மனிதனல்ல
கண்ணிரண்டுங் குழிந்துநிற்குங் குருடனல்ல
கற்கோட்டைக் குள்ளிருக்கும் வேந்தனல்ல
எண்ணமுடன் பகைஞர்பசி நோயைத் தீர்ப்பான்
ஈரைந்து கரமுடையோன் பரமனல்ல
பெண்ணணங்கே இக்கதையின் சாரமாய்ந்து
பேசிடிலோ ஆசிரியப் பெயருண்டாமே. (80)

மரத்திலொட்டி யேவசிக்கும் வவ்வாலல்ல
மரவுரியைத் தரித்திருக்கும் யோகியல்ல
சிரசில்கங்கைச் சடையுமுண்டு சிவனுமல்ல
சிலபேர்கள் காத்திருப்பார் சிப்பாயல்ல
உருவுகொண்டே பருத்திருக்கும் சிலந்தியல்ல
உச்சியிலே குடுமியுண்டு செட்டியல்ல
கரத்திலே கலகலென வளையல்பூண்ட
கண்மணியே கண்டிதனைக் கழறுவாயே. (81)

கொத்துவழி பார்ப்பான்பசி யாளியல்ல
குளிநீருக் கேயிசைவான் தபசியல்ல
புத்திரனாற் றுணிறப்பான் பொன்னனல்ல
போற்றுமவர்க் கரசளிப்பான் குபேரனல்ல
நத்தினவர்க் குதவிடுவான் நாலைந்தாக
நந்தன்முன் பேத்தியரைப் பெற்றெடுப்பான்
சித்தத்தா லுற்றுணர்ந்திக் கதையின்சாரம்
தெரிந்துநீ சேயிழையே செப்புவாயே. (82)

காதலாய்ச் சரந் தொடுக்கும் மதனுமல்ல
காயமெங்கும் வெளுத்திருக்கும் பாண்டுவல்ல
போதமுறச் சேர்ந்தணையும் புருடனல்ல
பூவையர்மேல் வீற்றிருக்கும் பணியுமல்ல
வேதவிதி வேட்டல்புரி கணவனல்ல
மெய்காட்டிப் பணம்பறிக்கும் விலைமாடல்ல
பேதமறக் கற்றுணர்ந்த பெரியோர் முன்னே
பேருலகி லிப்பொருளைப் பேசுவீரே. (83)

சோலைகண்டே உள்ளிருக்கும் மந்தியல்ல
　　துடிசிகப்பு மஞ்சளிடுந் தோகையல்ல
ஆலைவைத்தே அரைக்கவருந் தனவானல்ல
　　அருஞ்சுவையு மளிக்குங்காம தேனுமல்ல
கோலுகொண்டு சார்புழியுங் கள்ளுமல்ல
　　கொப்பரையிற் கொண்டுவிடும் எண்ணெய்யல்ல
வாலையெனும் பருவமுள்ள மானேதேனே
　　வளமையா மிக்கதையை வழுத்திடாயே. (84)

கூட்டிலே யிருக்குமது கிளியுமல்ல
　　கொழுந்தோடிப் போகுமது இரைதின்னாது
காட்டிலே விட்டுவிட்டால் பறந்தேசெல்லும்
　　கனத்தமன்னர் வாசலிலே காவலர்க்கும்
எட்டிகத்தி பிடித்தோர்க்கும் எதிரேநிற்கும்
　　இச்சையுள்ளோர் பட்சமதாய் எடுத்துக்கொள்வர்
நாட்டிலே இக்கதையை உரைத்தாரானால்
　　நாமவரைக் குருவென்று நம்புவோமே. (85)

பேச்சுணவு தானுமில்லை பெருமூச்சுண்டு
　　பின்போவாள் முன்வருவாள் திரிவாளெங்கும்
வாச்சுதென்று கரித்துண்டம் வாரியுண்பாள்
　　மழைவந்தா லும்நனைவாள் வெயிலென்றெண்ணாள்
ஆச்சரியம் உயிரில்லை கண்காதில்லை
　　அப்பதனைக் கண்டாலோ குடிப்பேனென்பான்
எச்சில்லை எவருக்கும் இடங்கொடுப்பாள்
　　எப்படிநாம் சொன்னாலும்அப்படிக்கேட்பாளே.(86)

கொங்கையதிற் பால்வடியும் பூமுடிப்பாள்
கூறியொரு மாதங்கா லுமிருப்பாள்
அங்கமெல்லாம் மினுமினுக்க எட்டிப்பார்ப்பாள்
அவள்பேரில் யாவருமே ஆசைகொள்வார்
செங்கையினுற் கொங்கைகளைப் பிசையச்சொல்வாள்
தேடிவரு வோர்விலைக்கு வாங்கிச்செல்வார்
எங்கள்பசி தணிப்பாயென் றவளைக்குத்தி
யிடித்தடித்தும்பொங்கினபின் இணங்குவாளே. (87)

செண்டைப்போ லுச்சியிலே சிக்கறுத்துச்
சீவியிரு வகுப்பாகச் செகத்தோர்மெச்சக்
கொண்டையிட்டுப் பூமுடித்துக் கோடுதாங்கிக்
குலாவியே திரிவார்கள் கூந்தல்தன்னைக்
கண்டவுடன் சேரவிரலணைந்துக் கிள்ளிக்
கைபிடித்துக் கணக்கிற் று கைகாட்டுமென்பர்
அண்டியிலே யிருப்பாருக் கரவங்கேட்க
ஆடுவார் தாசியல்ல அறைகுவாயே. (88)

ஒத்தைக்கொம் பேறிநிற்கும் பட்சியல்ல
உட்கழுத்தி லரும்புமிடும் புட்பமல்ல
கொத்துவடம் மணிதரிக்கும் முத்துமல்ல
கொட்டிடவே பல்லிளிக்குங் குரங்குமல்ல
வெத்திசண்டை தானறியும் மல்லரல்ல
விரைந்துகளம் புகுந்துழலுங் கத்தியல்ல
முத்துமணித் தாவடங்கள் பூண்டமாதே
முன்னறிந் தின்னதென விளம்புவாயே. (89)

கட்டிகளம் போர்புரியும் வீரனல்ல
காணியெங்கும் சுற்றிவரும் கணக்கனல்ல
இட்டமுடன் மனையகலும் புருடனல்ல
இருப்பவர்மேற் றுசங்தொடுக்கும் பித்தனல்ல
சட்டமுடன் குத்துக்கே சளைக்கமாட்டான்
சகலருக்கும் வயிற்றெரிச்சல் தள்ளிக்காப்பான்
அட்டதிக்கும் சுற்றிவருங் கீர்த்தியுள்ளான்
ஆனாலும் மானுளே அறிந்து சொல்லே. (90)

மஞ்சள்தனை மெய்யணியும் மடந்தையல்ல
மணம்புரிந்தே காதல்கொளும் மனைவியல்ல
கொஞ்சிபல பேரேந்துங் குழந்தையல்ல
கொற்றவர்க ளிடத்தமருந் திருவுமல்ல
பிஞ்சகன்மேல் நின்றாடும் பாம்புமல்ல
பிரியமுடன் சேயருந்துந் தேனுமல்ல
கொஞ்சுகிளி மொழியுமிளம் பருவமாதே
குணமுண்டா மிக்கதையைக் கூறுவாயே. (91)

வழுத்துகுட லுண்டுஜீ விப்பதல்ல
வரிமுதுகி லுண்டுஅணிப் பிள்ளையல்ல
பழுத்தநிற மேனியுண்டு கிழவனல்ல
பலவிடத்தி லேபடுக்கும் பித்தனல்ல
குழித்தபெரு வயிறுமகோ தரமுமல்ல
கொடியிட்டே தான்வசிக்கும் வேந்தனல்ல
செழித்தமதி முகத்தாளே தேனேமானே
செகத்திலிகத்தோர்க்குதவும்தெளிந்துசெப்பே. (92)

தலைபெருக்கும் உடல் சிறுக்கும் அகப்பையல்ல
தன்வாயால் மரங்கொதும் பறவையல்ல
வலியபுயந் தட்டியெழும் மல்லரல்ல
வாழ்குலத்தை யழித்திடுவான் சகுனியல்ல
கொலைகளவுங் கேயிசைவான் குரூரனல்ல
குவலயத்தில் நம்மாலே கொலைஞ்ஞானன்
சிலைமதனன் தேவிரதி வடிவினாளே
சிந்தைமகிழ்ந் திப்பொருளைச் செப்புவாயே. (93)

காட்டிவிற்கும் குண்டுண்டு கோவியல்ல
கட்டுமுண்டு வெட்டுமுண்டு வங்கமல்ல
வாட்டியிட்ட சுருளுண்டு ஓலையல்ல
வலுத்தகளி மண்ணுண்டு பூமியல்ல
பாட்டிசைக்கும் சபைக்குவரும் பரத்தையல்ல
பலரிடமும் முன்னிருந்து பகரச்செப்பும்
நாட்டிலுனக் கிடில்லை நன்காராய்ந்து
நாயகமே இக்கதையை நவிலுவாயே. (94)

கண்டித்தே குழிபுகுவான் குழியுங்கொள்வான்
கசக்கித்தண் ணீர்பிழிவான் வண்ணானல்ல
அண்டிநின்று தானுழல்வான் தாசனல்ல
ஆசைகொளச் சுற்றும்விலை மாதரல்ல
கொண்டுகூட மேந்தி நிற்பார் சோதியல்ல
கூவிவரும் புகைவண்டி தானுமல்ல
தண்டைசிலம் போசையிடும் பதத்தினாளே
சமர்த்தாகு மிக்கதையைச் சாற்றுவாயே. (95)

காலுமிரண் டுண்டெழுந்து நடக்கமாட்டாள்
கண்ணுண்டும் மேல்சிமிட்டி விழிக்கமாட்டாள்
மேலுயர்ந்த கூன்முதுகு நிமிரமாட்டாள்
மேதினியிற் றானறுப்பாள் விதவையல்ல
பாலுகந்து குடித்தறியாள் பாகுதின்பாள்
பசருமணல் மூட்டிவளை வடித்தேவாழ்வாள்
சேலும்வே லும்போன்ற விழியணங்கே
தெளிந்துமிக கதைப்பயனைச் செப்புவாயே. (96)

கட்டழகி தனக்குதடு கழுத்துமுண்டு
கண்ணில்லை கைக்கொண்டால் காசுகேட்பாள்
தட்டினல் தொனிக்குஞ்சே கண்டியல்ல
தணலிலே வெந்துருகும் ஈயமல்ல
குட்டியெடுத் தோடிவரும் ஓநாயல்ல
குளந்தனிலே நீர்குடிக்குங் குதிரையல்ல
கட்டியே சுமைசுமக்குந் தோட்டியல்ல
கைவிட்டா லோடிப்போம் கழறுவீரே. (97)

வாய்தனிலே நெருப்பெரியும் பேயுமல்ல
வாயுவுண்டு வயின்வளர்க்கும் பாம்புமல்ல
தேய்வோடு கால் கூட்டுந் தேவனல்ல
செங்கையால் மூடிநிற்கும் சிமிழுமல்ல
பாய்படுத்துக் கால்தூக்கும் பரத்தையல்ல
படியிலுள்ள கொல்லரில்வாழ் மடந்தையல்ல
ஓய்ந்துமே சிலநேரம் தனித்திருப்பாள்
ஒண்டொடியே இக்கதையை உரைசெய்வாயே.(98)

பஞ்சுதனைத் தான்புசித்துத் தையலோடு
பலநாளும் போர்வையிட்டுப் படுத்துறங்கும்
தஞ்சமென விழுந்தவர்கள் தலையைத்தூக்கும்
தாழ்வில்லா மஞ்சத்தே அடுத்துவாழும்
வஞ்சியர்போல் மேல்விழுந்து மருவப்பார்க்கும்
வசியஞ்செய் திடுந்தாசி வேசியல்ல
அஞ்சலெனக் கண்டவரை வணங்கச்செய்யும்
ஆரணங்கே இக்கதையை அறிந்துசொல்லே. (99)

அக்கினியில் நின்றுவிளை யாடிப்பார்ப்பான்
அம்புவியில் யாவருக்கும் அச்சமீய்வான்
பக்குவமாய்க் கொலைசெய்து பக்கம்வாழ்வான்
பலத்தவிசை வில்லுக்கும் அதிகம்பாய்வான்
தக்கபடி வனம்புகுந்து வேட்டைசெய்வான்
தனிவழிக்குத் துணையாகிக் காவல்காப்பான்
முக்கனியுஞ் சர்க்கரையும் பாலோடொத்த
மொழியணங்கேயிக்கதையைமொழிகுவாயே.(100)

கிள்ளிக்கை பார்ப்பதுவுந் தேய்ப்பதுவு முண்டும்
கெம்பீர மாய்வறுத்து இடிப்பதுவுமுண்டும்
அள்ளிநறு நெய்சுண்ணஞ் சேர்ந்தாடலுண்டும்
அதற்கான ஜாடியதி லடைப்பதுண்டும்
கள்ளருந்துங் காளையைப்போற் றிரிவதுண்டும்
கருதிமரி யாதைகெட்டு நடப்பதுண்டும்
புள்ளிமயிற் சாயலென்றும் நடையினளே
பொற்கொடியே இக்கதையைப் புகலுவாயே. (101)

விரைந்துவிரிந் தாதிமுனே படுப்பதுண்டு
வீரமுள தேவருக்கும் படைப்பதுண்டு
கரிந்துவிழ நெருப்பெடுத்து மூட்டலுண்டு
கண்கள்புதைந் தெழப்புரட்டிக் கொளுத்தலுண்டு
உரிந்துகடித் துட்புகவே உமிழ்நீ ருண்டு
உணர்ந்திடுவா ரிதையறியா ருலகிலில்லை
தெரிந்தபெரி யோர்சிறியோர் வாயிலாவார்
தெளியலாம் சேயிழையே செப்புவாயே. (102)

முரிப்பதுவும் பார்ப்பதுவும் முகர்வதுவும் உண்டு
முன்வாயைத் திறக்காம லடக்கலுண்டு
விரிப்பதுவும் படுப்பதுவும் சேர்க்கையாலே
மெய்வரட்சி கண்டுஜலங் குளிப்பதுண்டு
பிரிப்பதுவும் கட்டுவதுங் கொள்வதுண்டு
பித்தமேற் கொண்டுதலை சுழல்வதுண்டு
எரிப்பதிலாச் சிரிப்பதற்ற முகத்தினளே
ஏந்திழையே இக்கதையை யியம்புவாயே. (103)

தாயாகிப் பிள்ளையைமே லேந்திநிற்பாள்
தட்டாமல் தச்சன்கை கொத்து மாவாள்
ஓயாமல் மேல்கீழாய் நின்று தேய்வாள்
உள்ளதெல்லாந் தானுருட்டிக் கழுவிச்சேர்வாள்
வாயாடும் பெண்களின்தோள் வலுவைப்பார்ப்பாள்
வனிதையல்ல புருடனல்ல மற்றோரல்ல
சாயாத கோடுற்ற தையலாளே
சரியாயிக் கதைப்பயனைச் சாற்றுவாயே. (104)

குலுக்குண்டு வலுக்கொண்டு குதிப்பதுண்டு
கொத்துமணி முத்துவடங் கொள்வதுண்டு
வலிப்புண்டு சிரிப்புண்டு வாட்டமுண்டு
மருங்கிலுடை யணியொட்டி யாணமுண்டு
கலுக்குண்டு பிலுக்குண்டு அலைப்புமுண்டு
கணிக்கவல்ல வேசியுங் கூத் தாடியல்ல
சிலைக் குநிகர்வடிவழகி தேவமாதே
தெளிவாயிக் கதைப்பயனைச் செப்புவாயே. (105)

குடுகையைப்போல் வாயுமிரு கண்ணுமுண்டு
கூரணிந்த வாலுடன்கூண் டடைவதுண்டு
சுடுகையறும் அன்னமதைக் கொள்வதுண்டு
சுகம்பெறநங் கையர்கைக்குள் ளாவதுண்டு
படுகையொரு யிரப்படுப்பிற் செல்வதுண்டு
பாகமொடு செய்வதெல்லாம் படைப்பதுண்டு
வடுமாசில் லாததொரு தேகத்தாளே
மாங்குயிலே இக்கதையை வழுத்துவாயே. (106)

விரைக்காமற் பாத்தியில்நீ ரிரைப்பதுண்டும்
வித்துவே ரில்லாமற் காய்ப்பதுண்டும்
குரைக்காமற் புவிபடிந்தே யெடுப்பதுண்டும்
குற்றமிலா தப்புறத்தே குவிப்பதுண்டும்
தரைக்குளெக் குலத்தவரும் சமைப்பதுண்டும்
தக்கபடி சுவைக்குமற் றெவைக்குமாகும்
கரைக்கடங்காக் கடலமுதே கருதிப்பாரு
கண்மணியே இக்கதையைக் கழறுவாயே. (107)

கங்கைநதி புனல்மூழ்கிக் கரையிலேறிக்
கதிரவனைக் கண்டுடனுங் காய்ந்துவற்றிப்
பொங்குவரி சீனியுண்டு இடபமேறிப்
பூலோகம் காக்கவரும் சிவனுமல்ல
செங்கருட னுவக்கெடுக்குந் திருமாலல்ல
சிறந்தஅன்ன மேலேறும் பிரமனல்ல
இங்கிதனைக் கண்டறிந்து பொருளீதென்று
எந்திழையே சாந்தமுட னியம்புவாயே. (108)

உடல்நீண்ட பாதமுண்டு படிக்கமல்ல
உடம்பிலே கண்ணுண்டிந் திரனுமல்ல
முடியில்பல கங்குண்டு சூல்லாவல்ல
முழநீளம் நீண்டசிங் குழலுமல்ல
இடைநிறைந்த சபைபாடும் புலவரல்ல
இச்சையுறும் படிநடக்குந் தாசியல்ல
பெடையன்ன நடைநடக்கும் பெண்ணேகண்ணே
பெறுமையுறும் இக்கதையைப் பேசுவாயே. (109)

மோதிரமும் வளைபூணும் மாதரல்ல
முழுகதலைக் கெண்ணெய்யிடும் வணிகனல்ல
கோதிபின்னல் சடைமுடிக்கும் கூந்தலல்ல
குச்சுதொங்கல் பூண்டகூத் தாடியல்ல
சோதிமெய்யில் நூலணியும் மறையோனல்ல
தொடுத்திடக்கா விடித்தோடும் சுணங்கனல்ல
சீதமலர் போன்றசே வடியினளே
தெளிவாயிக் கதைப்பயனைச் செப்புவாயே. (110)

வன்னவுடைப் பெண்ணரசே வழுத்தக்கேளாய்
வழியிற்போ கிறபெண்ணை மறித்தேதகையால்
உன்னதமா யிருதுடையும் அகற்றிக்கொண்டு
உள்ளிருக்குந் துகிலாடை யொத்துக்கிவைத்துக்
கன்னியரை யிருதனமும் கசறவாங்கிக்
காரியமுந் தான்தீரக் கனைப்புமாறும்
மின்னலிடைப் பின்னல்சடை மெல்லிமாதே
விளங்கவிக் கதைப்பயனை விளம்புவாயே. (111)

தொட்டவுடன் தலைகுனிந்து சலாமுஞ்செய்வா
தோளேறி யணைந்திருப்பான் தோகையல்ல
வெட்டவெட்டக் கர்த்தனெனப் பேரும்பெற்றான்
மேடுபள்ளம் சரிசமமாய் விளங்கச்செய்வான்
ஒட்டியடிப் பார்கொல்லர் தச்சன்கூட
உறவாடிப் பூவையர்கை வேலைபார்ப்பான்
இட்டந்தா னிரண்டுகாப் பணிந்துகொள்வான்
இக்கதைக்குப் பயனறிந்து இயம்புவாயே. (112)

மாதமொரு பூப்பூக்கும் மாதரல்ல
வளமுக்கண் படைத்திருக்கும் சிவனுமல்ல
பாதமிலை பால்நெய்தரும் பசுவுமல்ல
பாலர்முதல் கோலர்வரை பசித்தோருண்பார்
வேதன்கைப் படைப்பதனில் இவளொருத்தி
விஷ்ணுசிவன் கோயிலுக்கு விருந்துக்காவாள்
வீதியிலே விலைகூறும் வேசியல்ல
மெல்லியரே இல்லிருப்பாள் சொல்லுவீரே. (113)

நீட்டியகால் முடக்காதாள் மோடிக்காரி
நேரிழையைக் கைபிடித்து முகத்தைப்பார்த்து
ஆட்டமுடன் பாட்டுமெக் காளந்தீர்த்து
அணியணியாய்த் தோரணங்க ளழகாய்க்கட்டி
நாட்டிலுள்ள ஏழைகளை யாதரிக்க
நானென்றே வாடாத மாலைசூட்டிப்
பாட்டியுட பாட்டியுங்கை யாண்டுவந்தாள்
பைங்கிளியே இங்கிதனைப் பகருவாயே. (114)

கூத்தாடி யவளொருத்தி குடிலுக்காரி
கொண்டையிலே பூச்சூடி யாடக்கண்டேன்
நேத்துவரை அவளுயிரும் என்னுயிருமொன்றாய்
நித்திரைக்கு முதற்படுப்பாள்நிசமாய்ச்சொன்னேன்
பார்த்தாலும் அவள்மேனி பசலைபோலே
பகுந்தாலும் அவளுறவு பால்போலாகும்
ஆத்தாடி யெடுப்பார்கைப் பிள்ளையாவாள்
அக்கரையா யிக்கதையை அறிந்துசெப்பே. (115)

மங்கையர்கள் அதிமோக மாகக்கொள்வர்
வன்னநிற மாயிருக்கும் பூவுமல்ல
சங்கரனார் பிறப்பதற்குத் தேசமெங்கும்
தலைவிரித்துத் திரியுமது பேயுமல்ல
பொங்குங்காய் கறிக்குறவாய்ப் பொருந்திவாழும்
புகழான நன்மையதிற் சிலுருசெய்யும்
திங்கள்முகம் போலிலங்கும் தெரிவையாரே
திறமாயிக் கதைப்பயனைச் செப்புவாயே. (116)

தானவரும் வானவரும் சமர்த்தாய் மூந்நாள்
சண்டையிட்டுக் கொண்டாரென் றெவருஞ்சொல்வர்
சீனகரும் சோனகரும் எங்குந் தேடித்
திரியமல் கட்டிவெளி யேறிவந்தாள்
ஆனவரை இரவுபகல் தூங்கமாட்டாள்
அதிகாரஞ் செப்பரிது எவர்க்குமஞ்சாள்
போனவளே வந்தவளே யினனவளென் றறிந்து
பொற்கொடியே இக்கொடியைப் புகலுவாயே (117)

இருபேரும் ஒருவீட்டிற் பிறந்திருந்தும்
எந்திழையும் புருடனும்போ லிணங்கிப்பேசி
பருவமது தப்பிடநீர் தனிலேமூழ்கிப்
பாவமே மிகுந்திடத்தான் ஜன்னிமூட
விருதுபெரும் அக்கினியில் மூழ்கியேறி
மேதினியிற் காதுகளி லபயஞ்செய்வர்
சுருதிமொழிப் படிநடக்கும் சுகுணமாதே
சொற்பமல்ல இக்கதையைச் சொல்லுவாயே. (118

காந்தியுள பெண்புருட ரொன்றுசேரக்
கணக்கெடுக்க வேயைம்பத் திரண்டுபேரில்
எந்திக்கைப் பந்தடித்தா ராறெட் டொன்பான்
இருவரெதிர் வரவடித்து வெட்டிக்கொள்வர்
சாந்ததனிக் கோர்ட்டதிலே கேள்விகேட்டே
சதிசெய்யப் பட்டாளத் திருப்புமுண்டு
வேந்தர்களும் மாந்தர்களும் விரும்புவார்கள்
மெல்லியரே இக்கதையை விளம்புவீரே. (119)

வாசல்வழி போகாமற் பிறகேகூடி
வருவாரும் போவாரும் நிரம்பவுண்டும்
காசலையாம் அன்னமுண்டும் தண்ணீருண்டும்
கையாடக் காலாடும் கியானஞ்சேரும்
ராசியமோ பின்னாலே தளமுஞ்சேரும்
ராஜர்கொலு வினிலொருத்த னாலேதோன்றும்
தேசுலவுந் தென்கூடற் பதியில் வாழும்
தெரிவையரே இதன்பயனைச் செப்புவீரே. (120)

செஞ்சொல்லோ மூன்றெழுத்துப் பெயருமுண்டு
தேகத்தின் மேலதிக வரைகளுண்டு
தஞ்செயலால் நடவார்சப் பாவியல்ல
தையலரைச் சேர்ந்திடுவார் புருடனல்ல
கொஞ்சுபரி மேலிடுவார் துலுக்கரல்ல
குளிர்காலம் காய்ந்திடுவார் கிழவரல்ல
பஞ்சவர்கள் சகாயமெப் பொழுது முண்டும்
பாவையரே இக்கதையைப் பகருவீரே. (121)

சக்கரத்தைத் தரித்திருப்பார் விஷ்ணுமல்ல
தாரணியோர்க் கமுதளிக்கும் உமையாளல்ல
உக்கிரமாய் விலைப்படுவார் மாடாடல்ல
உடையவனென் றுரைத்திடுவார் உருத்ரனல்ல
அக்கரையாய் மோகிப்பார் அரம்பையல்ல
அனல்முழுகி வெளியேறுஞ் சீதையல்ல
இக்கதையை இன்னதென வெனக்குச் சொன்னால்
எவருமுமக் கிணையிலையென் றியம்புவோமே. (122)

முற்றுப்பெற்றது.

121055

ஸ்ரீலஸ்ரீ

டி. டி. சங்கரதாஸ் சுவாமியவர்கள்

இயற்றிய நாடக சரித்திரங்கள்

1.	சத்தியவான் சாவித்திரி	0	6	0
2.	கோவலன்	0	6	0
3.	அல்லி	0	6	0
4.	பவளக்கொடி	0	6	0
5.	ஞானசௌந்தரி	0	6	0
6.	சாரங்கதரன்	0	6	0
7.	வள்ளிதிருமணம்	0	6	0
8.	நல்லதங்காள்	0	6	0
9.	மயானகாண்டம்	0	6	0

மொத்தமாய் ஒரு செட் வாங்கிக்கொள்பவர்களுக்கு 9-சரித்திரங்கள் சேர்ந்தது செட் 1-க்கு ரூ 3—0—0

மனோஹரி சரித்திரம்.

நெல்லை T. S. சிவராமலிங்கம் பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றது. இதன் விலை அணு 4.

மேற்கண்ட புத்தகங்கள் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

மு. கிருஷ்ண பிள்ளை,

ஏஜண்டு

பி. நா. சி. பிரதர்ஸ், புக்ஷாப்,

மதுரை.